புதுச்சேரி அரசு
புதுச்சேரி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாமன்றம்

<u>செய்திக்குறிப்பு</u>

வருகின்ற 17.07.2019 அதிகாலை 12:13 மணி முதல் விடியற்காலை 5:47 மணி வரை தென்படுகின்ற பகுதி சந்திர கிரகணத்தை தொலைநோக்கி மூலம் பொதுமக்கள் காண்பதற்கு புதுச்சேரி அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாமன்றம் முனைவர் அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பூமியானது சூரியனின் சுற்று வட்ட பாதையில் சுற்றி வருவதை கிரகணப்பாதை என்று அழைக்கின்றோம். சந்திரனும் பூமியை சிறு வட்டப்பாதையில் சுற்றிவருகின்றது. ஆனால் சந்திரனின் சுற்றுப்பாதை சரியான கிரகணப்பாதையில் அமையவில்லை. அது சுமார் 5 டிகிரி சாய்வு கோணத்தில் அமைந்துள்ளது. இதனால் மிக அரிதாக நிலவானது பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள கற்பனைக்கோட்டை கடக்கும்போது சூரியகிரகணம் ஏற்படுகிறது. எனவே சந்திரனின் பாதை கிரகணபாதையோடு ஒன்றியிருக்கும்போது, அமாவாசையின் போது சூரியகிரகணமும், பௌர்ணமியின் போது சந்திரகிரகணமும் நிகழ்கிறது. சந்திர கிரகணம் எப்போதும் முழுநிலவு நாட்களிலேயே நடைபெறும்.

இது பூமியிலிருந்து பார்க்கும்போது நிலவானது முற்றிலும் சூரியனுக்கு எதிர்திசையில் வரும்போது ஏற்படுகிறது. இந்த அரிதான நிகழ்வு பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள கற்பனை கோட்டினை நிலவு சென்றடைந்து பூமியின் நிழலை கடக்கும்போது ஏற்படுகிறது. மற்ற பௌர்ணமி நாட்களில் சந்திரன் பூமியின் நிழலுக்கு மேலாகவோ அல்லது கீழாகவோ கடக்கும்போது கிரகணம் தெரிவதில்லை. சூரியவெளிச்சத்தால் ஏற்படும் பூமியின் நிழலானது இரண்டு வகையாக அறியப்படுகிறது. மிக அடர்த்தியான நிழலாகவும் (UMBRA) மற்றொன்று அடர்திகுறைந்த / இலகுவான நிழலாகவும் (PENUMBRA) அறியப்படுகிறது. சந்திரனின் பகுதி பூமியின் இலகுவான நிழலில் நகர்கின்றபோது ஏற்படுவது பகுதி சந்திரகிரகணம் எனப்படுகிறது. இத்தகைய நிகழ்வு தான் தற்போது நடை பெறவுள்ளது.

இந்த கிரகணம் ஆசியா, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்கா போன்ற பெரும்பாலான பகுதிகளிலும் இந்தியாவிலும் தெரியும். புதுச்சேரி பகுதியில் இந்த கிரஹணம் தென் படுகின்ற நேரம்:

| | |
|---|---|
| இலகுவான நிலவின் தொடக்கம் | 12:13 hrs (17.07.2019) |
| பகுதி கட்ட நிலவின் தொடக்கம் | 1:31 hrs (17.07.2019) |
| பெரிய கிரகணம் | 3:00 hrs (17.07.2019) |
| பகுதி கட்ட நிலவின் முடிவு | 4:29 hrs (17.07.2019) |
| இலகுவான நிலவின் முடிவு | 5:47 hrs (17.07.2019) |

சந்திர கிரகணத்தை திறந்தவெளியில் தொலைநோக்கியின்றி கண்டுகளிக்கலாம். விண்வெளியில் வெறும் கண்களால் பார்க்கும்போது பாதிப்பு ஏதும் ஏற்படாது.

தெளிவான வானம் பொறுத்தமட்டில், இந்த அரிய நிகழ்வை முனைவர் அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தில் 16.07.2019 இரவு 8 மணி முதல் கோளரங்க கலைஅரங்கத்தில் விண்வெளி வல்லுநர் மூலம் முதலில் விளக்கவுரை நிகழ்வும், தொடர்ந்து தொலைநோக்கி மூலம் கோள்கள் மற்றும் கிரஹணம் கண்டுகளிக்க மறுநாள் (17.07.2019) காலை 5:45 மணி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்மிதா. R)
உறுப்பினர் செயலர்
புதுச்சேரி அறிவியல் & தொழில்நுட்ப மாமன்றம்